JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **1/2019** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | **M. பாஸ்கரன்**<br>**(Retired SI)** | Village | |
| Father's Name | | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 14.07.2026.**

இந்த சாட்சி விசாரணை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 275ன்படியும், குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 விதி 51 படியும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற காணொலி காட்சி விதிகள் 2020ன் படியும் காணொலி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொலி காட்சியின் நீதிமன்ற முனையில் மாண்புமிகு குற்றவியல் நீதிபதியும் நீதிமன்ற ஊழியர்களும் ஒருங்கிணைப்பாளராக திருமதி.சி.கௌதமப்பிரியா, Data entry operator என்பவரும் மற்றொரு முனையில் வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள M. பாஸ்கரன் (SI Retired) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள ஒருங்கிணைப்பாளர் திருமதி. பிரியதர்ஷினி (தட்டச்சர்) ஆக இருந்து சாட்சி முனை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மற்றொரு முனையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் , எதிரியும், கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு.சிவானந்தம்,

அவர்களும் தயாராக உள்ளனர். சாட்சியம் அளிக்க வந்துள்ளதை அடையாள அட்டை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பிற்கும் அனுப்பி வைக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. இரு தரப்பினரின் சம்மதத்தின் பேரில் சாட்சி விசாரணை காணொலி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

**1)** நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 19.01.2016 ம் தேதி மதியம் 14.00 மணிக்கு பெருந்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது வாதி ரவிக்குமார் த.பெ.பழனிச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று சிறப்பு உதவி ஆய்வாளர் துரைசாமி என்பவர் பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 33/2016 சட்டபிரிவு 279, 304Aல் இ.த.ச. பிரிவின் படி வழக்கு பதிவு செய்து அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. காவல் ஆய்வாளர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இருந்ததால் அவரது அறிவுறுத்தலின் பேரில் முதல் கட்ட புலன் விசாரயை செய்தேன். பின்னர் பெருந்துறை அரசு மருத்துவமனையில் ராயல் ஆம்புலன்ஸில் வைத்திருந்த மணி பிரேதம் மீது பஞ்சாயத்தார்களுக்கு அழைப்பு அனுப்பி அவர்கள் முன்னிலையில் 19.01.2016 ம் தேதி 14.30 மணி முதல் 16.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் நிலை காவலர் 850 திரு. ஷாம்பிரசாத் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்காக மணியின் பிரேதத்தை அனுப்பி வைத்தேன்.

3. சம்பவ இடமான பெருந்துறை – கோவை ரோடு மடத்துப்பாளையம் பிரிவு அருகில் சென்று அன்றைய தினமே பகல் 17.00 மணிக்கு சென்று சாட்சிகள் ரமேஷ் மற்றும் நடராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சாட்சிகள் இருவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ரவிக்குமார், பழனிச்சாமி, சரவணக்குமார், கோமதி, சாவித்ரி, கலைவாணி, தேவராஜன், சதீஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் எனது முதல் கட்ட புலன் விசாரணையை முடித்து மேல் கட்ட புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் விசாரித்த சாட்சிகள் அனைவரும் விபத்தில் இறந்து போனவருக்கு உறவினர் என்றால் சரியல்ல. விபத்தானது கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் பெருந்துறை – கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் ரோட்டில் தென்புறம் நடந்தது என்றால் சரிதான். அ.சா.1 ரவிக்குமார் தனது புகாரில் ரவிக்குமார் ரோட்டை கடக்க நின்று கொண்டு இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மடத்துப்பாளையம் பெருந்துறை – கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் வடபுறமாக அமைந்துள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ரவிக்குமார் வடபுறமாக நின்று கொண்டு தென்புறமாக நடந்த சம்பவத்தை பார்த்ததாக சொல்லி உள்ளார் என்றால் எந்த பக்கம் நின்று கொண்டு இருந்தேன் என்று சொல்லவில்லை. தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனம் செல்வதற்காக 5 அடியில் தனியாக விடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. விபத்தில் இறந்து போனவருக்கு இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று விசாரித்தேனா என்றால் சரியாக நியாபகம் இல்லை. நான் சம்பவ இடம் சென்றபோது விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்கள் ரோட்டிலேயே கடந்ததா அல்லது ஓரமாக இருந்ததா என்றால் சம்பவ இடத்தில் இரண்டு வாகனங்களும் அங்கு இல்லை. நான் சொன்ன நேரத்தில் ,சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகள் இருவரும் இறந்து போன நபருக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் சாட்சிகளை விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

காணொலி காட்சி மூலம் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டு பிழைகள் திருத்தப்பட்டு, சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு, சாட்சி சரியாக உள்ளதாக ஒப்புக் கொண்டார். மேற்படி சாட்சியத்தின் நகல் மின்னனு பதிவு மூலம் சாட்சியம் அளித்தவரின் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி சாட்சியத்தின் மின்னனு பதிவை பதிவிறக்கம் செய்து, அதில் சாட்சி கையொப்பமிட்டு, ஒருங்கிணைப்பாளர் சான்றொப்பமிட்டு அதை ஸ்கேன் செய்து நீதிமன்ற மின் அஞ்சல் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்க உத்திரவிடப்படுகிறது. மேற்படி சாட்சி கையொப்பமிட்ட அசல் பதிவை இந்நீதிமன்றத்திற்கு 3 நாட்களுக்குள் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்க உத்திரவிடப்படுகிறது. மேற்படி காணொலி காட்சி மூலம் பதிவு செய்யப்பட்ட மேற்படி சாட்சியத்தின் பதிவு பாதுகாப்பாக வைக்க உத்திரவிடப்படுகிறது.

ஒருங்கிணைப்பாளர்

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை